# மத்திய மின்வேதியியல் ஆய்வகம் *(CECRI)* காரைக்குடி
# குடிநீரிலிருந்து ஃப்ளூரைடை நீக்கும் சாதனம்

*காரைக்குடியில் அமைந்திருக்கும் மத்திய மின்வேதியியல் ஆய்வகம் மத்திய குடிநீர்வாரியத்துடன் இணைந்து அனைத்து மக்களும் ஃப்ளூரைடு நீக்கப்பட்ட குடிநீர் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் குடிநீரில் ஃப்ளூரைடை நீக்கி சுத்திகரிக்கும் சாதனத்தை உருவாக்கியுள்ளது.*

*உலக சுகாதார அமைப்புக் கழகம் (W.H.O) நிர்ணயித்துள்ளபடி ஒரு லிட்டர் குடிநீரில் ஃப்ளூரைடானது 1.5 மில்லிகிராமுக்குக் குறைவாக இருக்க வேண்டும். இந்தியாவின் 19 மாநிலங்களில் 14 வயதிற்குட்பட்ட 6 மில்லியன் குழந்தைகள் உட்பட சுமார் 66.62 மில்லியன் மக்கள் ஃப்ளூரைடு உள்ள தண்ணீரை உட்கொள்ளும் அபாயம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆந்திரா, குஜராத் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் 50 முதல் 100% மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. பீகார், ஜார்க்கண்ட், ஹரியானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒரிசா, பஞ்சாப், தமிழ்நாடு மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் 30 முதல் 50% மாவட்டங்களை பாதித்துள்ளன. சத்தீஸ்கர், டெல்லி, ஜம்மு-காஷ்மீர், கேரளா மற்றும் மேற்கு வங்கம் 30% க்கும் குறைவான மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளது.) நிலத்தடி நீரை நம்பியுள்ள நமது நாட்டில் தமிழ்நாடு (குறிப்பாக தர்மபுரி. ஈரோடு, கரூர் சேலம், கோவை, வேலூர், மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) உட்பட பல மாநிலங்களில் குடிநீரில் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக ஃப்ளூரைடு கலந்திருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.*

*தொடர்ந்து ஃப்ளூரைடு கலந்த குடிநீரை பருகுவதால் ஃப்ளோரோசிஸ் (FLUOROSIS) என்ற கொடிய நோய் பற்கள் மற்றும் எலும்புகளை பாதிக்கிறது, எலும்புக்கூட்டு பாதிப்பு நிவாரணமற்றது.*

*இந்த நோயிலிருந்து நம்மை காப்பாற்றிக்கொள்ள அறிவியல் முறையில் ஃப்ளூரைடை நீக்குவது மிகவும் அவசியமாகிறது,*

*ஃப்ளூரைடை நீக்கி தண்ணீரை சுத்திகரிக்கும் சாதனத்தை மத்திய மின்வேதியியல் ஆய்வகம் (CECRI) காரைக்குடி உருவாக்கியுள்ளது.*

*இந்த சாதனம் விலை மலிவானது, பொருத்துவது, இயக்குவது மற்றும் பராமரிப்பது மிக எளிது. மிகமிக குறைந்த மின்சக்தியில் இயங்கக்கூடியது. சுதேசி சாதனம்.*

விபரங்களுக்கு,

இயக்குனர்
மத்திய மின்வேதியியல் ஆய்வகம் *(CECRI)*
காரைக்குடி *– 630 003*
தொலைபேசி *(04565) 241241, 241251, 241502*
ஃபேக்ஸ் ***(04565) 241779,241713***